OS: 616/2018

Date: 25.11.2021

பெயர் : ராமச்சந்திரன்

**பிரதிவாதி தரப்பு சாட்சி 1 ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**குறுக்கு விசாரணை - 2 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பில்**

நான் 3ம் வகுப்பு படித்துள்ளேன். நான் கல்குவாரியில் பணி செய்து வருகிறேன். எனது மாத சம்பளம் ரூ.12000/-. எனது மாத ஊதியத்தை காட்டுவதற்கு நான் ஆதரவு எதுவும் தாக்கல் செய்யவில்லை. எனது வருமானம் குறித்து நான் வருமானவரி கணக்கு தாக்கல் செய்கிறேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.3 ஆவணத்தில் ராமச்சந்திரன் என கண்டுள்ள கையொபப்ம் என்னுடையதுதான். மேற்படி ஆவணத்தில் கோவிந்தன் மற்றும் சேட்டு கைரேகை வைத்துள்ளனர், குமார் என்பவர் கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் தாரமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.3 ஆவணத்தின் அடிப்படையில்கோவிந்தன், சேட்டு, குமார் ஆகியோர் என்னை பொது அதிகார முகவராக சேர்த்துள்ளனர் என்றால் சரிதான். வா.சா.ஆ.எ 3ல் கண்டுள்ள சொத்தை விற்பனை செய்வதற்காக்கதான் என்னை பொது அதிகார முகவராக நியமனம் செய்து பதிவு செய்து கொடுத்துள்ளனர் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணத்தில் மேற்படி ஆவணம் கடனுக்காக ஏற்படுத்தி கொடுக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எனக்கு போலியான ஆவணங்கள் மற்றும் தகவல்கள் சொல்லி ஆவணங்கள் தயார் செய்யும் வழக்கம் உள்ளதா என்றால் இல்லை. எனக்கு பொது அதிகாரம் கொடுத்த கோவிந்தன், சேட்டு, குமார் ஆகியோர் என்னிடம் வாங்கிய பணத்தை திருப்பி கொடுத்துவிட்டார்களா என்றால் இல்லை. அவ்வாறு எனது தொகை திருப்பி கொடுக்கப்படாமல் குறித்து நான் வழக்கறிஞர் அறிவிப்போ, காவல் நிலைய புகாரோ கொடுத்தேனா என்றால் இல்லை. என்னிடம் வாங்கிய பணம் திருப்பி கொடுக்காதது குறித்து நான் தற்போது வரை எந்த நீதிமன்றத்திலும் மேற்படி நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எதுவும் தொடரவில்லை என்றால் சரிதான். மேற்படி நபர்கள் என்னிடம் பணம் வாங்கி கொண்டார்கள் என்பது குறித்து வா.சா.ஆ.3 நீங்கலாக வேறு ஆவணங்கள் எதுவும் எழுதி பெற்றுக்கொள்ளவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணம் கடனுக்காக எழுதி

கொடுக்கப்பட்டது அல்ல என்றும், மேற்படி ஆவணத்தில் கண்டுள்ள சொத்தை விற்பனை செய்வதற்காகத்தான் என்னை அவர்கள் முகவராக நியமனம் செய்துள்ளனர் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ல் உள்ள ராமச்சந்திரன் என கண்டுள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் எழுதி கொடுப்பவர் என்ற கோதாவில் நான் பொது அதிகார முகவர் என குறிப்பிடப்பட்டுள்ள இடத்திற்கு கீழே கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதே ஆவணத்தில் எழுதி வாங்குபவர்கள் என்ற இடத்தில் கீறல் வெள்ளையம்மாள், சரவணன் என கண்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணமும் தாரமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் 15.09.2015 ல் எழுதப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வெள்ளையம்மாள், சரவணன் என்னை ஏமாற்றி கிரயம் பெற்றுக்கொண்டார்கள் எனபது குறித்து வா.சா.ஆ.4 க்கு பின்னிட்டு தற்போது வரை காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி நபர்கள் மீது நான் நீதிமன்றத்தில் வழக்கு எதுவும் தொடரவில்லை என்றால் சரிதான். முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை நான் படித்து பார்த்துதான் கையொப்பம் செய்துள்னேன். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் 2, 3 பிரதிவாதிகளுக்கு கிரய பத்திரம் எழுதி கொடுத்துள்ளேன் தவிர சுவாதீனம் ஒப்படைக்கவில்லை என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.4 கிரய ஆவணம் ஏற்பாடுத்தி கொடுத்த போது எனக்கு பொது அதிகாரம் வழங்கிய நபர்களின் சார்பாக சொத்தின் சுவாதினத்தை ஒப்படைத்துவிட்டதாகத்தான் மேற்படி ஆவணத்தில் கண்டுள்ளது என்றும், அந்த விவரம் எனக்கு அன்றே தெரியும் என்றும், அதற்கு முரணாக நான் சாட்சியம் அளிக்க முடியாது என்றால் சரியல்ல. வெள்ளையம்மாள் மற்றும் சரவணன் கிரயடம் பெற்ற பிறகு சொத்தை தங்கராஜ் என்பவருக்கு விற்பனை செய்துவிட்டனர் என்றும், மேற்படி தங்கராஜ் தான் சொத்தின் உரிமையாளர் என்ற முறையில் சொத்தின் சுவாதீனத்தில் உள்ளார் என்றால் சரியல்ல. கிரய பத்தீரம் 2,3 பிரதிவாதிகளுக்கு ஏற்படுத்தி கொடுத்தது நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை பெற்ற பிறகுதான் தெரிந்துகொண்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி வெள்ளையம்மாள் 1ம் வாதியின் மனைவி என்றால் சரிதான். 1ம் வாதிக்கும், 2ம் பிரதிவாதிக்கும் கருத்து வேறுபாடு ஏறப்ட்டு நீண்டகாலமாக பிரிந்துள்ளனர் என்றால் சரிதான். மேற்படி 1, 2ம் பிரதிவாதி பிரிந்துள்ள விவரம் தெரிந்து தற்போது கோவிந்தன் என்னிடம் வாங்கிய கடனுக்காக என்னை ஏமாற்றி 2, 3

பிரதிவாதிகள் கிரயம் பெற்றுக்கொண்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் எனது முதல் விசாரணையில் கோவிந்தனுக்கு ரூ.1,00,000/- கொடுத்ததாக சொல்லியுள்ளேன். நான் கோவிந்தனுக்கு பணம் கொடுத்த நிலையில் அவரிடம் தான் பணம் வசூல் செய்ய வேண்டும் என்றால் சின்னபொண்ணும் உடன் இருந்தார். சாட்சி மீண்டும் கோவிந்தனின் 2ம் மனைவி வெள்ளையம்மாள் உடன் இருந்ததாக கூறுகிறார். நான் கடன் கொடுத்தாக சொல்லும் நேரத்தில் வெள்ளையம்மாளிடம் நான் கையொப்பம் எதுவும் பெற்றுக்கொள்ளவில்லை என்றால் சரிதான். நான் எந்த காலத்திலும் கடனுக்காக வா.சா.ஆ.3 ஏற்படுத்தி கொடுக்கவில்லை என்றும், நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. குடும்ப சொத்து வேறு நபர்களுக்கு சென்றுவிடக்கூடாது என்பதற்காகத்தான் வெள்ளையம்மாள் உரிய தொகை செலுத்தி சொத்தை கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. வெள்ளையம்மாள், சரவணனுக்கு வா.சா.ஆ.4ன் அடிப்படையில் ரூ.2,18,000/-க்கு விற்பனை செய்ததாக கண்டுள்ளது என்றால் சரிதான். கடனுக்கு அதிகமாகவே மேற்படி கிரய தொகை கண்டுள்ளதால் கடனுக்காக மேற்படி வா.சா.ஆ.3 ஆவணம் ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை தயார் செயத்போது என்னுடன் சேட்டு, கோவிந்தன், வெள்ளையம்மாள், சரவணன் ஆகியோர் உடன் இருந்தனர். பிரதிவாதிகள் முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை தயார் செயத்போது என்னுடன் உடன் இருந்ததாக நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர்களுக்கு ஆதரவாக நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை 4ம் பிரதிவாதி தரப்பில்</u>**

2, 3 பிரதிவாதிகளின் குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்வதாக கூறுகிறார்.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

ஒப்பம்/DW1

ஒப்பம் / சார்பு நீதிபதி, ஓமலூர்,